## 5.48 2007–08 – சுயஉதவிக்குழு பெண்களுக்கான அடிப்படைக் கல்வித் திட்டம் – முன்னோடித் திட்டமாக 1000 ஊராட்சிகளில் செயல்படுத்துதல்

ஊரக வளர்ச்சி ( ம) ஊராட்சி (மஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 105 நாள் : 19. 6.2007

படிக்க:

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் நே.மு.கடித எண்.645/ஜி2/2007, நாள் 16.4.2007

**ஆணை**

மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி) அவர்கள் 12.4.07 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:

> ''தற்போது 54 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்ற போதிலும், ஊரகப் பகுதிகளில் எழுத்தறிவில்லா சுய உதவிக் குழு பெண்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் இருந்து வருகிறது. '' ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்திற்கே அளிக்கப்படும் கல்வியாகும்''. ஆகவே சுய உதவிக் குழு பெண்களுக்கு ''அனைவருக்கும் ஆரம்பக் கல்வி'' திட்டத்துடன் இணைந்து, அடிப்படைக் கல்வி அளிக்க, ஒரு முன்னோடி திட்டத்தை, 1000 ஊராட்சிகளில் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டம் ''சுயஉதவிக்குழு கல்வித் திட்டம்'' என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் அரசால் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது''.

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், அரசிற்கு செயற்குறிப்பு ஒன்று அனுப்பி வைத்துள்ளார். அதில் அவர் 2007–08 ஆம் ஆண்டில் ரூ.1.75 கோடி செலவில் சுய உதவிக்குழு பெண்களுக்கு கல்வி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். இது கல்வித் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் ''அனைவருக்கும் ஆரம்பக் கல்வி (SSA)'' திட்டத்துடன் இணைத்து சுய உதவிக்குழுப் பெண்களுக்கு கல்வி அளிக்க ஒரு முன்னோடி திட்டமாக 2007–08 ஆம் ஆண்டில் 1000 ஊராட்சிகளில் கீழ்க் குறிப்பிடப்பட்ட முறையில் செயல்படுத்தப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**ஊராட்சித் தேர்வு**

(i) முதற்கட்டமாக, 2006–07–ஆம் வருடத்தில், ஆதார நிதி பெற்ற 4000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் சுய உதவிக் குழுக்களுக்கு கல்வி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

(ii) ஒவ்வொரு ஊராட்சியிலுள்ள கல்வியறிவுள்ளவர்கள்/ கல்வியறிவற்றவர்கள் போன்ற அடிப்படைத் தகவல்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சேகரிக்கும்.

(iii) விருப்பமுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இந்த அடிப்படை கல்வி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

(iv) அவற்றுள் முன்னோடித் திட்டமாக 1000 ஊராட்சிகள் இத்திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்படும்.

**சுய உதவிக் குழு பெண்களுக்கு கல்வி வழங்கும் திட்டத்திற்கு தன்னார்வலர்களை தேர்வு செய்தல்**

அ) ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும் இரண்டு தன்னார்வலர்களை ஒவ்வொரு ஊராட்சியிலும் கண்டறிந்து அவர்கள் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பர்.

ஆ) இத்திட்டத்தில் பணியாற்ற விருப்பமுள்ள தன்னார்வலர்கள் கல்வியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

இ) இவர்கள் 10 வது மற்றும் +2 படித்தவர்களாகவும், சுய உதவிக் குழு உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும்.

ஈ) ஒவ்வொரு தன்னார்வலர்களும் ஒரு ஊராட்சியிலுள்ள 25 படிப்பறிவில்லாத பெண்களுக்கு கல்வி பயிற்றுவிப்பர்.

உ முதலில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே தகுதி வாய்ந்த ஐந்து தன்னார்வலர்களிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

ஊ) அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் (SSA) வட்டார வள மையத்தின் ஆசிரியர்களால் 5 தன்னார்வலர்களிலிருந்து 2 தன்னார்வலர்களை தேர்வு செய்வர்.

எ) இந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 தன்னார்வலர்களுக்கு அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் (SSA) வட்டார வள மையத்தின் மூலமாக செயல்முறை கற்றல் முறைப்படி 15 நாட்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

**பயிற்சியின் அடக்கம் :**

1) அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் (SSA) கீழ் தொடக்க கல்வி பள்ளிகளுக்காக தயாரிக்கப்பட்ட கல்வி உபகரணங்கள் இப்பயிற்சிக்கும் பயன்படுத்தப்படும்.

2) தேர்வு செய்யப்பட்ட தன்னார்வலர்கள் படிப்பறிவு இல்லாத பெண்களுக்கு பள்ளிக் கட்டிடத்திலோ அல்லது சுய உதவிக் குழுக்களின் கட்டிடத்திலோ வகுப்புகள் எடுப்பர்.

3) உறுப்பினர்களுக்கு அடிப்படை கணக்கு, தமிழில் எழுதப் படிக்க பயிற்சி அளிக்கப்படும்.

**சுய உதவிக் குழு பெண்களுக்கு அடிப்படை கல்வி வழங்கும் திட்டத்திற்கு ஏற்படும் செலவினங்கள்**

1) ஒவ்வொரு தன்னார்வலருக்கும், மாதம் ரூ.400/– வீதம் ஒரு வருடத்திற்கு வெகுமானத் தொகையாக உரிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக வழங்கப்படும். எனினும், இந்த வெகுமானத் தொகையை செயல்பாட்டின் அடிப்படையில் பட்டுவாடா செய்ய வழிவகை செய்யப்படும்.

2) பயிற்சியின் தரத்தை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு 6வது மாத இறுதியில் இடைநிலை மதிப்பீடு மற்றும் 12வது மாத இறுதியில் திட்ட மதிப்பீடும் அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் (SSA) மூலம் செயல்படுத்தப்படும்.

3) சுய உதவிக்குழு பெண்களுக்கு கல்வி வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு தன்னார்வலர்களுக்கும் ரூ.3000/– மதிப்புள்ள பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும்.

4) இத்திட்டத்தை செயல்படுத்த நிர்வாக செலவுக்காக ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் மாதம் ரூ.160/– (நோட்டு, புத்தகம், எழுதுபொருள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக) வழங்கப்படும்.

**செலவின விவரம்:**

| வ. எண் | விவரம் | ஒரு நபருக்கு (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக இரண்டு தன்னார்வலர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்படும் வெகுமான தொகை | ரூ.400 @ 12 மாதம் @ 2 தன்னார்வலர்கள் | 9,600 |
| 2. | தன்னார்வலர்களுக்கு பயிற்சிக்காக வழங்கப்படும் உபகரணங்கள் | ரூ.3000 @ 2 தன்னார்வலர்கள் | 6,000 |
| 3. | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு நிர்வாக செலவு (நோட்டு, புத்தகம், எழுது பொருட்கள் மற்றும் பல) | ரூ.160 @ 2 | 1,920 |
| | ஒரு ஊராட்சிக்கான மொத்த தொகை | | 17,520 |
| | **1000 ஊராட்சிக்கான மொத்த செலவினம்** | **ரூ.17,520 @ 1000** | **1,75,20,000** |

3. இப்புதிய சுய உதவிக்குழுக்களுக்கான கல்வி வழங்கும் திட்டத்திற்கு 2007–08ம் நிதியாண்டில் ரூ.1,75,20,000/– ஒதுக்கீடு செய்யுமாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இத்தொகையை ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் பெறுவதற்கு அதிகாரம் அளித்து அதனை காசோலை மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு உரிய ஆணை பிறப்பிக்குமாறு அரசினை மேலும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அனுப்பி வைத்துள்ள மேற்குறிப்பிட்டுள்ள செயற்குறிப்பினை கவனமாக ஆராய்ந்த பின், அதனை ஏற்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி சுயஉதவிக்குழு பெண்களுக்கு அடிப்படை கல்வி வழங்கும் திட்டத்திற்கு ரூ.1,75,20,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்தொகையை ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் பெற்று அதனை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு காசோலை மூலம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

5. இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரை கலந்தலோசித்து தேவைக்கேற்ப மாற்றம் செய்ய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் செயலருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

6. மேற்கண்ட செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

> “ 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூகநலன் –103 – மகளிர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம் – LW – சுயஉதவிக்குழு கல்வித் திட்டம் – 09.உதவிமான்யங்கள் 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் – (து.தொ.கு.எண்.2235–02–103–LW 0937)

7. மேற்கண்ட செலவினம் “புதுப்பணி” (New Service) ஆகும். இச்செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல், பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BG-I) துறையினால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதி (BG-I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் 2007–08ம் ஆண்டு வரவு–செலவுக்கான கருத்துருவினை அனுப்பும்போது இந்நேர்வினை துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்ப்பது குறித்து உரிய கருத்துரு மற்றும் விளக்கக் குறிப்பினை தக்க தருணத்தில் அரசுக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் இருப்பார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.கு.எண்.39431/நிதி (ஊ.வ)/07, நாள் 19.6.2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.307 (முன்னூற்று ஏழு)–ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்